RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1717

# கோபல்ல கிராமம் புதினத்தில் இன வரைவியல் கூறுகள்

ஜெ. காவேரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்- 626001, தமிழ்நாடு, இந்தியா

# Ethnographic Elements in the novel “Koppella Graamam (Village Kopella)”

J. Kaveri [a, *]

[a] Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: kaveri@vvvcollege.org

Received: 17-03-2022
Revised: 26-10-2022
Accepted: 04-11-2022
Published: 17-12-2022

Check for updates

## ABSTRACT

Of all the disciplines of man's study, anthropology is the only one that seeks to fully understand man by studying his existence in the space of life, the space in which he lives, and in the evolutionary space of time. Such anthropology falls under four major categories physical anthropology, cultural anthropology, linguistic anthropology, and archeology. The studies of society fall under the category of ethnography. From such an ethnographic point of view, the study explores the novel ‘Kopella Graamam’. Researchers refer to the Kopella Graamam novel as an ethnographic novel. The book reflects the life and history of the Kammavars community who migrated to Tamil Nadu from Andhra Pradesh. It is evident from this study that the novel contains all the elements of ethnography to the extent that it is the forerunner of the novels.

**Keywords:** Koppella Graamam, Ethnographic Elements, Novel.

## முன்னுரை

மனித இனம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது. அதிலும் கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடியாகப் போற்றப்படுவது நம் தமிழினம். இலக்கியங்கள் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. அவ்வவ் கால வாழ்வினைப் பதிவு செய்வதாய் அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் அமைந்திருக்கும். இத்தகைய இலக்கியங்களின் வழி மனிதர்களின் பண்பாடுகளைப் பற்றி ஆய்வது இன்றியமையாததாகின்றது. இவ்வகை ஆய்வினைப் பண்பாட்டியல், பண்பாட்டு மானிடவியல் என்பர். இப்பண்பாட்டியலின் ஒரு கூறாகவே இனவரைவியல் திகழ்கின்றது.

## இன வரைவியல்

இனவரைவியல் என்பது குறிப்பிட்ட மக்கட் குழுவின் எல்லா வகையான மரபுகளையும், அவ்வினத்தாரின் உணர்வோடு பதிவு செய்வது இனவரைவியலாகும். அது எந்தக் குழுவைப் பற்றியதாக வேண்டுமானாலும் இருக்கலாம். மனிதப் பண்பாட்டின் விளக்கவியல் வருணனைக்கலை மற்றும் அறிவியல் அந்நியமான உலகங்களைப் பற்றி அறிதல், ஒரு இனத்தைப் பல்வேறு கூறுகளின் வாயிலாக இனங்காணுதல், குறிப்பிட்ட இனத்தின் கலாச்சார பழக்க வழக்கங்களை முன்வைப்பது, எழுத்தாளன் மற்றும் ஆய்வுக்குட்பட்ட மக்களின் விளக்கவுரைகள், துல்லியமான தரவுகளை வெளிக்கொணர்வது, களப்பணியை மையமாகக் கொண்டது என்பது அறிய வருகின்றது.

மானிடவியல் அறிஞரான பக்தவத்சல பாரதி, 'ஒரு தனித்த சமூகத்தின் பண்பாட்டைப் பற்றி மானிடவியலாளர்கள் அச்சமூகத்தாரோடு நீண்ட காலம் ஒன்றி வாழ்ந்து ஆய்வு செய்து அதனை, எழுத்தில் எழுதி அளிக்கும் தனிவரைவு நூலே இனவரைவியல் எனப்படும். இத்தகு நீண்ட காலக் களப்பணியில் உற்றுநோக்கிப் பண்பாட்டை விவரிக்கும் தனிவரைவுகளை (Monographs) எழுதும் மானிடயலர்கள் இனவரைவியலர் (ethnographer) எனப்படுவர்'. என்று குறிப்பிட்டுள்ளார் (Bhakthavatsala Bharathi, 2011).

மேலும், 'இனவரைவியல் என்பது களப்பணியை அடிப்படையாகக் கொண்ட கண்ணோட்டமாகும். அதாவது, மானிடவியலர் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அல்லது ஏதேனும் ஒரு துணைப்பண்பாட்டைப் பற்றி அப்பண்பாட்டைக் கொண்டிருக்கும் மக்களோடு குறிப்பிட்ட காலம் வரையில் தங்கியிருந்து, அவர்களோடு வாழ்ந்து அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் பங்கேற்று, ஆராய்ந்து வெளிப்படுத்துவது' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, இனவரைவியல் என்பது ஒரு குறிப்பிட்ட மனித சமூகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற களப்பணி பண்பாட்டு ஆய்வுமுறையாகவோ, ஆய்வின் வெளிப்பாடாக அமையக்கூடிய முடிவுகளின் பிரதியாகவோ இருக்கலாம். இதன் மூலம் அம்மக்களின் பண்பாடு, சட்ட நியதிகள், வழிபாட்டு முறைகள், சடங்குகள், சமயநிலைகள் போன்றவை வெளியுலகிற்குப் புலப்படுத்துகின்றன என தனது ஆய்வேட்டில் அன்பரசன் (2011:18) குறிப்பிட்டுள்ளார்.

எனவே ஒரு குறிப்பிட்ட மனித இனம் அல்லது சமூகத்தின் பண்பாட்டை அறிவதற்கு, அப்பண்பாட்டையுடைய மக்களோடு குறுகிய காலமோ அல்லது நீண்ட காலமோ வாழ்ந்து, களஆய்வு முறைகளைப் பயன்படுத்தி, அவர்களின் எல்லாவிதமான மரபுகள் பற்றியும் அறிந்து, அதனை அப்படியே முறைப்படுத்தி எழுத்துப் பூர்வமாக அளிக்கும் ஆவணமே இனவரைவியல் என்பது புலனாகின்றது. இனவரைவியல் என்பது குறிப்பிட்ட மனித சமூகத்தின் அல்லது இனத்தின் ஒட்டுமொத்த வாழ்வியல் கூறுகளையும் விரிவாக விளக்குவதே என்னும் பொருளில் அமைகின்றது.

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் வாழும் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்வியல் கூறுகளை, அவர்களோடு குறிப்பிட்ட நாட்கள் அல்லது ஆண்டுகள் தங்கி வாழ்ந்து, கள ஆய்வு முறைகளின் மூலம் பெறப்படும் முதன்மையான தரவுகளைக் கொண்டு விளக்கமாக எழுதுவது இன வரைவியலாகும். இவ்வகையான இனவரைவியலை இலக்கியத்துடன் தொடர்புபடுத்தி ஆய்வு செய்தல் இன்றியமையானதாகின்றது. இலக்கியம் பண்பாட்டுக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அதனால் இனவரைவியல் ஆதாரங்களில் ஒன்றாக இலக்கியம் காணப்படுகின்றது. ஒரு அயற் பண்பாட்டை விளக்க முற்படும், எந்த ஒரு சிறந்த இனவரைவியல் தொகுப்பும் பின்வரும் முதன்மையான கூறுகளைக் கொண்டிருக்கும் என்று சுட்டுகின்றார் (Bhakthavatsala Bharathi, 2017).

## கோபல்ல கிராமம் புதினத்தில் இனவரைவியல்

கோபல்ல கிராமம் புதினம் தமிழ் புதின உலகில் புதியதோர் வடிவத்தை அமைப்பை உருவாக்கிய ஒன்று. ஆரம்ப கால கட்டங்களில் இதனைப் புதினம் என்று எண்ண மறுத்தனர். புதினத்திற்கான அமைப்பியலைக் கொண்டு அமையவில்லை என்று குற்றம் சாட்டினர். ஆனால் பின்னால் இப்புதினமே இனவரைவியல் புதினம் என்று சுட்டுமளவு மக்களிடத்தில் சிறப்பானதொரு இடத்தைப் பிடித்தது. இனவரைவியல் புதினம் என்று இதனைச் சுட்டுவதோடு இதனைப் புலம்பெயர் இலக்கியம் என்றும் சுட்டலாம். புலம்பெயர்ந்தோரின் வலியினையும் வேதனையினையும் இப்புதினத்தில் ஆங்காங்கே காணலாம். மங்கத்தாயாரு அம்மாள் என்ற பாத்திரத்தின் வழி கம்மவார் எனும் இனத்தாரின் தோற்றம், அவர்கள் தமிழகத்தில் வாழ்வியலை அமைத்துக் கொண்டதன் நோக்கம், அமைத்துக் கொண்ட விதம் போன்றன படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

## வாழ்விடம்

இனவரைவியலுக்கான கூறுகள் பலவற்றில் முக்கிய இடம் பிடிப்பது அவர்களது வாழ்விடமும் அவர்கள் தங்கள் இனத்தை நிலைபெறச் செய்ததற்கான முறைகளுமே ஆகும். இனவரைவியலை ஆராயும் பொழுது ஆய்வாளர்கள் அவ்வினத்தவருடன் வாழ்ந்து அவர்களது பண்பாட்டை வாழ்வியலைக் கற்றுக்கொள்வது என்பர். ஆனால் இலக்கியங்களில் இனவரைவியலை ஆராயும் பொழுது அம்முறை அமைவது சற்றுக் கடினம். ஆனால் சில எழுத்தாளர்கள் தாங்களே அவ்வினத்தவரில் ஒருவராகி தம் குழுவில் உள்ள முன்னோர்கள் வழி கதை கேட்டு படைப்பு படைப்பது. மற்றொன்று பிறர் வழி கேட்டு படைப்பு படைப்பது. இதில் முன்னதன் தாக்கமே பெரும்பாலும் இனவரைவியல் அமைப்பில் ஒத்து காணப்படும். கி.ரா கோபல்ல கிராமம் புதினத்தைப் படைத்ததும் முன் வழியினைப் பின்பற்றியே. தன் முன்னோர்கள் தான் கண்டும் கேட்டடையும் வைத்தே இதனைப் படைத்துள்ளார். எனவே கம்மவார் சமூகத்தினர் ஆந்திர தேசத்தில் இருந்து சென்னா தேவியின் மீதும் தம் இனத்தவர் மீதும் துலுக்கர்கள் செய்த கொடுமைகளைப் பொறுக்க மாட்டாது அங்கிருந்து தப்பி வந்த நிகழ்வு மங்கத்தாயாரு அம்மாளின் நினைவின் வழி சுட்டப்படுவதாய் உள்ளது (Rajanarayanan, 2016).

தமிழ்நாட்டில் வந்து இருக்க வேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுத்த விதத்தினைச் சுட்டுகின்ற பொழுது "என் மக்களே எங்கேயோ ஒரு தேசத்தில் பிறந்து, எங்கேயோ ஒரு தேசத்தில் வந்து வாழ வேண்டியிருக்கிறதே என்று நீங்க நினைச்சி மனம் கலங்க வேண்டாம். எல்லாம் பூமித்தாயினுடைய ஓர் இடம் தான். அவளுடைய கையின் ஒரு விரலிலிருந்து நீங்க இன்னொரு விரலுக்கு வந்துருக்கீங்க" என்று அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் குறித்த மனிதர்களின் மனக்கவலையைப் பறைசற்றுவதாய் உள்ளது (Rajanarayanan, 2016). மேலும் காடாக இருந்த அவ்விடத்தை அவர்கள் கழனியாக்கி, தம் வாழ்விடமாக மாற்றிக் கொண்ட செய்தி கோபல்ல கிராமம் - பக்.எண்-90,98 போன்ற பக்கங்களில் விரித்துச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறு கம்மவார் இனமக்கள் தமிழகத்தில் வந்து தம் வாழ்விடத்தையும் அப்பகுதியின் புவியியல் கூறுகளும் புதினத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தங்கள் வாழ்விடங்களில் பிற தேவைகளுக்காகப் பிற சமுதாயத்தினரையும் தங்களுடன் கூட்டி வந்து குடியமர்த்திய குறிப்பும் காணப்படுகின்றது (Rajanarayanan, 2016). மேலும் வாழ்விடங்கள் பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது காடாய் இருந்து கழனியாய் மாறி, கிராமம் முறையாக வளர ஆரம்பிக்கவே குடிநீர்க்கிணறுகள், கண்மாய் போன்றவற்றை உருவாக்கித் தம் வாழ்விடத்தை வளப்படுத்தினர்.

மேலும் சூழலியல் சிந்தனை உடையவர்களாய் மரங்கள் வளர்த்தனர். "ஒவ்வொரு குடும்பத்தாரும் அவர்களுடைய பெயர் சொல்லும்படியாக ஒரு மரம் நடவேண்டும் என்பது ஊர்ப்பொதுவிலிருந்த ஏற்பாடு" காட்டிலிருந்து தப்பி வந்த பசுவினைக் கொண்டு தங்களது வாழ்வினை அமைக்க ஆரம்பித்தனர் (Rajanarayanan, 2016). எனவே அதனை மையமாகக் கொண்டு தாங்கள் வாழ்ந்த பகுதிக்கு கோபல்ல கிராமம் என பெயர் சூட்டினர். இவ்வாறு கோபல்ல கிராமத்தின் புவியியல் அமைப்பு, வாழ்விடச் சூழல் போன்றன படைப்பாளர் வழி இப்புதினத்தில் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

## உணவு முறைகள்

உணவு உடல் வளர்ச்சிக்குரியதாக இருந்தாலும் நம் சமூகத்தில் அது பண்பாட்டோடு கலந்த ஒன்றாய் திகழ்கின்றது. மக்கள் தம் வாழ்வியல் முறையுடன் உணவுமுறையை இணைத்துள்ளனர். "தமிழ்ச் சமூகத்தில் உணவானது சமூக மொழியாகப் பரிணமிக்கிறது" என்பார் பக்தவத்சல பாரதி (கி.ரா. வின் கரிசல் பயணம் பக்.எண்-171) அவ்வகையில் கோபல்ல கிராமத்தில் மக்கள் மேற்கொண்ட உணவு முறையானது அவர்களது வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. ஆந்திரதேசத்தில் இருந்து தப்பித்து இப்பகுதியில் தம் குடியை அமர்த்திய பொழுது அக்காட்டில் உள்ள பனம்பழம், கோவைப் பழங்கள், கள்ளிப்பழங்கள், நெய்த்தக்காளி போன்றவற்றையே உணவாக்கியுள்ளனர் (Rajanarayanan, 2016).

மேலும் பூமியைத் தோண்டும்போது கிடைத்த சிலவகை கிழங்குகள், காட்டுக்கீரை வகைகள், சோற்றுக்கற்றாழை, தேன், வேட்டையாடிய உயிரினங்கள் போன்றவற்றை உணவாக்கிக் கொண்டனர். இவ்வாறு தம் குடியை அமர்த்துவதற்கு முன்னர் அப்பகுதியில் இயல்பாகக் கிடைத்த உணவுப் பொருட்களையே உணவாக்கிக் கொண்டனர்.

அதன் பின்னர் தங்கள் இருப்பை அங்கு உயர்த்தியதன் பின்னர் வேப்பம் கொட்டை, காட்டாமணக்கு விதை போன்றவற்றைக் கொண்டு எண்ணெய் தயாரித்து உணவு மேற்கொண்டனர் (Rajanarayanan, 2016).

முழு கிராம வாழ்வு தோன்றிய பின்னர் ஆட்டுக் கறி, உளுந்து வடை, பால் உணவு, வரகரசி உணவு போன்று பக்குவப்படுத்திய உணவினை மேற்கொள்ள ஆரம்பித்தனர். இவ்வாறு கோபல்ல கிராமம் புதினத்தில் சுட்டப்படும் இனத்தார் தங்கள் வாழ்விடத்தை முழுமையாக உண்டாக்கும் முன்னர் நாடோடி இனத்தாரைப் போன்று கிடைத்த உணவையும் வாழ்விடத்தை அமைத்து மேம்பட்ட பின்னர் பக்குவப்பட்ட, பதப்படுத்தப்பட்ட உணவினை உண்ண ஆரம்பித்தனர் என அறிய முடிகின்றது.

## வழிபாடு

வழிபாடு என்பது மதம், குலம், நாடு, இடம், குடும்ப பழக்கவழக்கங்கள் போன்றவற்றின் அடிப்படையில் பல்வேறு வழிமுறைகளில் பின்பற்றப்படுகின்றது. சிறுதெய்வ வழிபாட்டு முறையே கிராம மக்களால் பெரும்பாலும் பின்பற்றக் கூடிய முறையாகக் காணப்படுகின்றது.

சிறுதெய்வ வழிபாடு என்பது நாட்டார் தெய்வங்களை வழிபடும் முறையாகும். இந்த சிறுதெய்வ வழிபாட்டில் வீட்டுத்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இனதெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு மற்றும் வெகுசனத் தெய்வ வழிபாடு எனப் பல வகைகள் காணப்படுகின்றன. இந்த தெய்வ வழிபாட்டு முறையில் பொதுவான இலக்கணங்களோ, வரைமுறைகளோ வகுக்கப்படவில்லை. அவை காலம் காலமாக முன்னோர்களால் செய்யப்படுகின்ற சடங்குகளை அடிப்படையாக வைத்து பின்பற்றப்படுகின்றன. இந்த தெய்வங்களின் வழிபாடானது நாட்டார் மக்களின் நம்பிக்கை அடிப்படையிலும், அவர்கள் முன்னோர்கள் கற்றுத் தந்த முறைப்படியும் நடக்கிறது.

மேலும் வீட்டுத் தெய்வம், குலதெய்வம், இன தெய்வம், ஊர்தெய்வம் என்று இச்சிறுதெய்வ வழிபாட்டு முறை காணப்படுகின்றது. கோபல்ல கிராமம் புதினத்தில் தங்கள் குலத்தில் வாழ்ந்து அகால மரணமடைந்த பெண்களோ அல்லது கற்பிற்காக மாண்ட பெண்களையோ தெய்வமாக வழிபடும் முறை காணப்படுகின்றது. மங்கத்தாயாரு அம்மாளின் வழிவந்தவர்கள் சென்னாதேவியைக் குலதெய்வமாக வழிபடும் நிலையும், துலுக்க மன்னனிடம் இருந்து தன்னைக் காத்துக் கொள்ள உயிரை விட்ட இளம்பெண்ணைத் தம் குலதெய்வமாக வழிபடும் சூழல் இப்புதினத்தில் காணப்படுகின்றது.

அவர்கள் இருந்த இடத்தில் இருந்து பிடிமண் எடுத்து வழிபடும் மரபு, அவர்களது உடைமைகளைக் கொண்டு வழிபடும் மரபு என்று அம்மரபு விரிந்து காணப்படுகின்றது. பல சமூகங்களில் காணப்படும் மாதா வழிபாடு, கன்னி தெய்வ வழிபாட்டின் தொடக்க நிலையாக இவர்களது வழிபாட்டு முறை காணப்படுகின்றது. பெண்களைத் தெய்வமாக வழிபடும் தாய்வழிச் சமூகத்தின் நீட்சியாகவே இதனை எண்ண வேண்டியுள்ளது.

மேலும் கழுவன் வழிபாட்டு மரபு கிராமத்தில் மிகுதியாக காணப்படக்கூடிய வழிபாட்டு மரபுமுறை. அச்ச உணர்வே வழிபாட்டின் தொடக்கம் எனலாம். அவ்வகையில் கழுவேற்றப்பட்டு இறந்த மனிதனால் தங்களுக்கு ஆபத்து வராமல் இருக்க அவனுக்கு நேர்த்திக் கடன் இடல், அவனைத் தெய்வமாக வழிபடல் போன்ற முறைகள் கோபல்ல கிராமம் புதினத்தில் காணப்படுகின்றன (Rajanarayanan, 2016).

இவ்வாறு கோபல்ல கிராம மக்கள் முன்னோர் வழிவந்த சிறுதெய்வ வழிபாட்டினை மேற்கொள்பவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

## குடும்ப அமைப்பு முறை

குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் வளர்ச்சி அடையத் தொடங்குகின்றது. குடும்பம் சிறிய அலகினைக் கொண்டதாக இருப்பினும் மனித பண்பாட்டில் அதிமுக்கிய இடம் வகிக்கின்றது. கோபல்ல கிராமம் புதினத்தில் கூட்டுக் குடும்ப முறையே காட்டப்பட்டுள்ளது. அவ்வின மக்களின் குடும்ப அமைப்பு முறைக்கு கோட்டையார் குடும்பமே சான்றாகக் காட்டப்பட்டுள்ளது.

குடும்ப மேற்பார்வையை வீட்டின் மூத்தவர் பார்த்தல், விவசாயம், கால்நடைகள், உறவு முறைக்குச் செல்லல், வீட்டு வேலைகள் செய்தல் என்று அக்குடும்பத்தில் உள்ள அனைவரும் தனக்கு என்று பிரிவினை எடுத்துக் கொண்டு அதனைச் செய்யல். அனைத்திற்கும் மேற்பார்வையாக அக்கையாக இருத்தல் என்று சிறு அரசாங்க முறையினையே வீட்டில் பின்பற்றியவர்களாகக் காணப்படுகின்றனர்.

மேலும் வீட்டில் உள்ள அனைவரும் மங்கத்தாயாரு அம்மாளுக்கு கட்டுப்பட்டு இருத்தல் என்பதைக் குறிப்பிடும் பொழுது, பெண்களுக்கு அவ்வினத்தினர் அளித்த முக்கியத்துவம் காணலாகின்றது. அது மட்டுமின்றி ஒரு குடும்பத்தில் உள்ளோருக்குப் பிரச்சனை வருகின்ற பொழுது, பிற குடும்பங்களில் உள்ளோர் அதனைத் தன்குடும்பப் பிரச்சனையாக எண்ணி தாங்கள் வசித்து வந்த இடத்தைக் கூட துறக்கும் மனமுடையவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். இது இவ்வின மக்களிடையே உள்ள குடும்பப்பற்றையும் மனிதநேயத்தினையும் காட்டுவதாக உள்ளது.

## பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள்

பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளே ஓரினத்தைப் பிற இனத்திடமிருந்து வேறுபடுத்திக் காட்டுபவையாக அமையும். ஒவ்வோர் இனத்திற்கென்றும் வேறுபட்ட பழக்க வழக்கங்கள் காணப்படும். அவ்வகையில் கோபல்ல கிராமம் புதினத்தில் வரும் கம்மவார் இனத்தாரின் பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் பலவிடங்களில் படைப்பாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

காதில் கடுக்கன் அணிதல், பச்சை வெண்ணெய் உண்டல், வெற்றிலை உண்டல், பாகப்பிரிவினை செய்யும் முறை, திருமணத்திற்கு முன்னர் முகச்சவரம் செய்யக் கூடாது எனல், மனைவி கர்ப்பமாக இருக்கும் பொழுது சவரம் செய்யாது இருத்தல், பல தார மணம், மறுமணம், ஐந்து நாட்கள் திருமண முறை, வைத்திய முறைகள், சோதிடம் பார்த்தல், யாத்திரை மேற்கொள்ளல், மருந்திற்கு பாம்பு நெய் தயாரித்தல், முள்ளெலிகளை இருமலுக்குப் பயன்படுத்தல், முயல் இரத்தத்தைத் தலைக்கு தேய்த்தல், நாள் நட்சத்திரம் பார்த்து திருமணம் செய்தல், தீண்டாமை பார்த்தல் போன்றன காணப்படுகின்றன.

மேலும் தொழில் என்று சுட்டுகின்ற பொழுது விவசாயம், அதில் புதிய உத்திகளைக் கையாளல், கால்நடைகள் வளர்த்தல், நூல் நூற்றல், பெண்கள் வேலை பார்த்தல், போன்றன காட்டப்பட்டுள்ளன.

நீதிக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாக இவ்வின மக்கள் காட்டப்பட்டுள்ளனர். பெண்களைத் தெய்வமாக எண்ணும் இவர்கள் தங்கள் நிலத்தில் ஒரு பெண்ணிற்கு தீங்கு நேர்கின்ற பொழுது தீங்கிழைத்தவனுக்கு மரண தண்டனை கொடுத்ததை கழுவேற்றம் பண்ணும் பகுதி மூலம் காண முடிகின்றது. சமுதாயத்தில் இன்று வழக்கொழிந்த மரண தண்டனை, அதிலும் மிகவும் கொடூரமான கழுவேற்றம் பற்றிய குறிப்புகள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அரசியல் முறை என்று சுட்டுகின்ற பொழுது சமூகத்தில் தலைக்கட்டு அதிகமாக உள்ள குடும்பமே இன்றும் கிராமங்களில் பெரிய குடும்பமாக எண்ணப்படுகின்றது. “அந்த நாட்களில் மனித பலமும் மனித எண்ணிக்கையும் அதிகமுள்ள குடும்பம் தான் பெரிய குடும்பம், பெரிய வீடு. அவர்களாலேயே நிலத்தைச் சீர்திருத்தி, அதிகக் கால்நடைகளைப் பராமரிக்க முடியும். இதனால் அதிக வருமானமுள்ள கோட்டையார் குடும்பம் பெரிய குடும்பமாகியது” என்ற வரிகளின் மூலம் சமூகத்தில் மனித எண்ணிக்கை அதிகமுள்ள குடும்பம் எவ்வாறு மக்களை ஆட்சி செய்பவர்களாக மாறினார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது (Rajanarayanan, 2016).

மேலும் இவ்வின மக்கள் விருந்தோம்பலில் சிறந்தோர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். அவர்களின் பொழுதுபோக்காக சேவல் சண்டை விடல், ஆடு, பசு, காளை, சேவல், கோழி போன்ற உயிரினங்களைப் பழக்கியமை, மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் மருத்துவம் பார்த்த முறை, மனிதர்களுக்கு பெயரிடும் முறை, தங்களைத் தாங்களே ஆட்சி செய்த முறை போன்ற பல்வேறு செய்திகள் இப்புதினம் முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

## முடிவுரை

கோபல்ல கிராமம் என்னும் இப்புதினம் இனவரைவியல் பெட்டகமாகவே திகழ்கின்றது. கம்மவார் சமூக மக்கள் ஆந்திரதேசத்திலிருந்து புலம்பெயர்ந்து வந்த சூழல், தங்கள் வாழ்விடத்தை அமைத்துக் கொண்ட முறை, அவர்களது பலதிறப்பட்ட உணவு முறைகள், குடும்ப அமைப்பு மற்றும் உறவு முறைகள், தொழில் முறைகள், பொழுது போக்குகள், திருமண முறை, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் போன்ற புதினம் முழுவதும் காணக்கிடக்கின்றன. இனவரைவியல் புதினம் என்பதற்கோர் சிறந்நதோர் எடுத்துக்காட்டாய் திகழ்கின்றது. இப்புதினத்தை வாசிப்பதன் மூலம் அம்மக்களின் வாழ்வியலோடு நாமும் பயணித்து அவர்களின் வாழ்வியலை நேரில் அறிந்தது போன்ற உணர்வைக் கி.ரா. அவர்கள் வழங்கியிருப்பார்.

## References

Bhakthavatsala Bharathi, S. (2017) Kiravin Karisal Payanam, Adaiyalam veeliyedu, Tirchy, India.

Bhakthavatsala Bharathi, S. (2011) Panpaattu Manudaviyal, Meiyappan Pathipagam, Chennai, India.

Rajanarayanan, Ki. (2016) Gopalla Grammam, annam veliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License